REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1]. [இதழ் 190

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு :	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை : தை 9உ வெள்ளி (22—1—54) ★ ★ ★ வெளியூர் : தை 10உ சனி (23—1—54)

புதியதோர் ஆபத்து கிளம்புகிறது

தமிழை அழிக்க — மற்றோர் முயற்சி

பாதுகாக்க வாரீர்!

டி. ஏ. வி. நாதன் பாணி

விருதுநகர், ஜன. 22—

"இந்திய அரசாங்கத்தினர் மொழியின் அடிப்படைக்கே தீங்கு விளைவிப்பதற்கு ஒரு சதி செய்து வருகின்றனர்; அதாவது, தமிழ்ச் சொற்களை வடமொழி எழுத்துக்களில் எழுத வேண்டுமென்று அரசாங்க ஆதரவின்கீழ் ஒரு முயற்சியைத் தொடங்கியிருக்கிறார்கள். தமிழ் மொழி வளர்ச்சி குன்றியிருக்கும் நிலையில் எழுத்துக்களின் உருவத்தையும் மாற்றிவிட்டால், தமிழுக்கு என்ன கதி நேரும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். இம்முயற்சிகளை எல்லாம் எதிர்த்து தமிழைப் பாதுகாக்க முற்பட வேண்டும்."

—இவ்வாறு, 18—1—54 அன்று, விருதைத் தமிழ் கழகத்தின் 8-வது ஆண்டு முதல் கலைமன்ற விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில், தோழர் டி. ஏ. வி. நாதன் அவர்கள் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசினார்:—

"தமிழ்நாடு இப்போது ஒரு நெருக்கடியான நிலையில் இருக்கிறது. தாய் மொழியாகிய தமிழுக்கும் அரசாங்க நடைமுறைக் கொள்கைகளினால் பல இன்னல்கள் ஏற்பட்டு வருகின்றன."

"தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். நாட்டிலுள்ள பல தமிழ் சங்கங்களும், நாட்டுக்கு வெளியே உள்ள பல தமிழர் சங்கங்களும் இது குறித்துத் தீர்மானம் நிறைவேற்றி ஆட்சியினருக்கு அனுப்பியிருக்கின்றனர். ஆனால், ஆட்சியாளர் இதுபற்றிக் கருத்துச் செலுத்துவதாகத் தெரியவில்லை."

"தமிழ் நாட்டுத் தலைவர்கள் தற்போது நாட்டிலுள்ள முன்னேற்ற எழுச்சியையும், தற்பாதுகாப்பு விழிப்பு உணர்ச்சியையும் பயன்படுத்திக்கொண்டு, உண்மையான தமிழ் நலத் தமிழகம் ஒன்று உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டால்தான், தமிழர் சமுதாயம் வீழ்ச்சியிலிருந்து மீட்சி அடைய முடியும்.'

"தமிழ் மாநிலம்—குறள் நெறி"

தோழர் வி. வி. ராமசாமி வீர முழக்கம்

பகை மூட்டும் சர்க்காருக்கு சாட்டை

"நம் தாய் மொழியாகிய தமிழின் உயர்வை உலக மக்கள் அறியாதிருக்கிறார்கள். அம்மொழியின் வளர்ச்சிக்கும், மக்கள் முன்னேற்றத்திற்கும் ஆட்சியினர் இடையூறு செய்து வருகிறார்கள். இதன் காரணமாக, தமிழ் மக்கள், அடிமை நிலை எய்தி விடுவார்களோ என்ற அச்சம் இருந்து வருகிறது."

—என்று, 18—1—54 அன்று, விருதைத் தமிழ் கழகத்தின் 8-வது ஆண்டு முதல் கலை மன்ற விழாவின்போது, வரவேற்புரை ஆற்றுகையில், தோழர் வி. வி. ராமசாமி குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசினார்:—

"தமிழ் மக்களிடையே இப்போது விழிப்பு ஏற்பட்டிருக்கிறது; அவ்விழிப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களுடைய உணர்ச்சியானது, வலுப்பெற்று, செயல் முறையில் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர்களுடைய முன்னேற்றத்திற்கும் பலன் தர வேண்டும்."

"நம்முடைய நாடு முழு அரசியல் விடுதலை பெற்று இயங்குகிறது; ஆனால், மக்களாட்சிக் கொள்கைகள் நடைமுறையில் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. இப்போக்கைக் கூர்ந்து கவனித்தால், அரசியல் விடுதலையையே, அடியோடு பாதித்துவிடுமோ என்று நாம் அஞ்ச வேண்டியிருக்கிறது."

"நாட்டு அரசாங்கம் எம்முறையில் நடத்தப்பட வேண்டும் என்பதை, திருவள்ளுவர் இலக்கணம் வகுத்துக் கொடுத்திருக்கிறார். திருவள்ளுவர் வகுத்த வழியைப் பின்பற்றாமல், பகையையும், அழுக்காறையும் ஏற்படுத்திக் கொண்டே போகிறார்கள். அவை வளருவதற்கு வேண்டிய செயல்களையெல்லாம் செய்து வருகிறார்கள். இந்த நிலைமையில் தமிழ் மக்கள் மிகுந்த விழிப்போடும், எச்சரிக்கையோடும் இருக்க வேண்டும்."

"தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும்; தமிழ் மாநிலம் ஏற்பட வேண்டும். அவற்றிற்காக தமிழ் மக்கள் பெருமுயற்சியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

தூத்துக்குடி சதி வழக்கு

தோழர் சண்முகம் பரோலில் விடுதலை

திருநெல்வேலி, ஜன. 20—

தூத்துக்குடி சதி வழக்கில் இணைக்கப்பட்டுள்ள தோழர் சண்முகம் (46 வயது) என்பவர் அவரது தந்தையார் இறந்தது சம்பந்தமாக இறுதிக் கடன்களை செய்வதற்காக இரு தினங்களுக்கு (27, 28 தேதிகள்) திருநெல்வேலி செஷன்ஸ் நீதிபதி பரோலில் விடுதலை செய்திருக்கிறார்.

தோழர் சண்முகத்தின் தந்தையார் இம்மாதம் 12-ந் தேதி யன்று இயற்கை எய்தினார்.

கிழக்கு வங்கத்தில் கைகலப்பு

டாக்கா, ஜன. 22—

பாகிஸ்தான் வசமுள்ள கிழக்கு வங்காளத்தில், பாரிசால் என்ற இடத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், முஸ்லிம் லீக் எதிர்ப்பு ஆரவாரக்காரர்களுக்கும் போலீசாருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பின் விளைவாக சில போலீசார் உள்பட பலருக்குக் காயமேற்பட்டிருக்கிறதென்று கூறப்படுகிறது.

திருமங்கலத்தில் தி. மு. கழகக் கொடி இறக்கப்பட்டது

—[o]—

தீவிர நடவடிக்கைக்கு அதிகாரியின் உறுதி

திருமங்கலம், ஜன. 22—

14—1—54-ல் திராவிடர் திருநாளன்று, இவ்வூர் தி. மு. கழகச் சார்பில், தெற்குத் தெருவில், தி. மு. கழகக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. 18—1—'54 இரவு, ஏற்றப்பட்டிருந்த தி. மு. கழகக் கொடியை ஒரு சில கலகபதிகளால் இறக்கப்பட்டு விட்டது. இச்சம்பவத்தை, போலீஸ் சப்-இன்ஸ்பெக்டருக்கு கழகச் செயலாளர் தோழர் ரசாக் அறிவித்தார். உடனே இதுபற்றி தக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதி கூறியுள்ளார்.

விமானங்களில் இந்தி எழுத்துக்கள்!

புதுடில்லி, ஜன. 22—

இந்திய ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷனின் விமானங்களில், இப்போது, இந்தி எழுத்துக்கள் காணப்பட ஆரம்பித்திருக்கின்றன. இதுவரை விமானங்களில் ஆங்கில எழுத்துக்கள் மட்டுமே எழுதப்பட்டு வந்தன.

அறிவுக்குத் தடை விதிப்பது ஆபத்தானது!

லண்டன், ஜன. 22—

"அறிவுக்குத் தடை விதிப்பதென்பது மிகவும் ஆபத்தானது; இந்த முறையில் தணிக்கை கூட விரும்பத் தக்கதல்ல," என்று 81 வயதுள்ள பிரிட்டிஷ் மேதை பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் கூறினார்.

கொரியாவின் புனர் நிர்மாணம்!

சியோல், ஜன. 21—

கடந்த ஆண்டு கொரியாவில் நடைபெற்ற திட்டங்களுக்காக ஐ. நா.-வின் கொரியா புனர் நிர்மாண ஸ்தாபனம் 490 லட்சம் டாலர்கள் செலவு செய்திருக்கிறது.

காங்கிரஸ் கலகபதிகளின் கண்ணியமற்ற செய்கை!

—(:)—

'காதல் ஜோதி'யை அணைக்க முயற்சி

இராமனுஜபுரம்புதூர், ஜன 22—

இவ்வூர் தி. மு. கழகத் தோழர்களால் திராவிடர் திருநாளன்று, 'காதல் ஜோதி' நாடகம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த நாடகத்தை நடைபெறவிடாமல் எப்படியும் தடுத்துவிடுவதென்று எண்ணிய இளைஞர் காங்கிரஸ் தோழர்கள், 'நாடகம் நடந்தால், கொலை நடக்கும்; கலகம் விளையும்,' என்று சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கும், டெப்டி சூப்பரின்டென்டென்டுக்கும் மனுச் செய்தனர்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஊருக்கு வந்து, நிலைமையை விசாரித்து, 'பொது இடத்தில் நீங்கள் நாடகம் நடத்த வேண்டாம்; சொந்த இடத்தில் நடத்திக் கொள்ளுங்கள்,' என்று கூறி விட்டுச் சென்றார்.

'சொந்த இடத்தில் கூட நாடகமும் நடைபெறக்கூடாது,' என்று இளைஞர் காங்கிரசார் கூறினர்; ஆனால், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் நடுநிலைமை நின்று, அவர்களின் கோரிக்கையை மறுத்து, நாடகம் நடைபெற அனுமதியளித்தார்.

பிறகு, 16—1—54 அன்று, இரவு 'காதல் ஜோதி' நாடகம் வெற்றிகரமாக அரங்கேறியது. ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் நாடகத்தைக் கண்டுகளித்தனர். தோழர் எம் வி சீனிவாசன் இசைவழங்கினார். நாமக்கல் தோழர் என். ஆர். வீரப்பா நாடகத்திற்குத் தலைமை தாங்கி சொற்பொழிவாற்றினார். நாடகம் இரவு 2 மணிக்கு இனிது முடிந்தது.

3,34,733 நர்சுகள்!

நியூயார்க், ஜன. 21—

அமெரிக்காவில் இப்பொழுது நர்சுகளாக இருக்கும் பெண்களின் எண்ணிக்கை 3,34,733 என்று அறிவிக்கப்படுகிறது.

கல்லக்குடி வழக்கில் தீர்ப்பு ஒத்திவைப்பு

(நமது நிருபர்)

திருச்சி, ஜன. 21—

திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டில், இன்று கல்லக்குடி வழக்கில் சம்பந்தப்பட்ட தோழர் கண்ணதாசன் உள்ளிட்ட 24 தோழர்கள் மீதுள்ள வழக்கில் தீர்ப்புச் சொல்லுவதாக இருந்தது.

இன்று காலை 10-மணிக்கெல்லாம் வழக்கைப் பார்வையிட ஏராளமான கழகத் தோழர்களும், பத்திரிகை நிருபர்களும், பொதுமக்களும் வந்திருந்தனர்.

வழக்கின் தீர்ப்பை, இம்மாதம் 28-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 22—1—1954 வெள்ளி

துயர் தீர்ப்பீர்!

சென்னை டிராம்வே கம்பெனியை மூடுவது பற்றி. உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் முடிவு கூறப்பட்டுவிட்டது. அந்தத் தீர்ப்பின்படி, இனி அந்தக் கம்பெனி சென்னையில் நடத்திவந்த தொழிலை நிறுத்திவிட அதிகாரபூர்வமாக தடையெதுவும் கிடையாது.

சென்ற எட்டு மாதங்களாக சென்னையில் டிராம்கள் செல்லுவது நிறுத்தப்பட்டன. அதுவும், திடீரென்று ஒரு நாள் காலை கம்பெனியின் ஏதேச்சாதிகார உத்தரவின் பேரில் கம்பெனி மூடப்பட்டது. நகரத்தின் முக்கிய போக்குவரத்து சாதனங்களில் ஒன்றாகவிருந்த டிராம்வே கம்பெனி தொழிலை நிறுத்தியதால், பல்லாயிரக்கணக்கான மக்கள் சங்கடத்துக்குள்ளாக்கப்பட்டனர். நிலைமையைச் சமாளிக்க அரசாங்கத்தினர் மேற்கொண்டு பல பஸ்களை விட்டதுடன் முன்பு செல்லாத பல வழிகளிலும் பஸ்களைச் செல்ல அனுமதித்தனர். இதனால் பெரும்பாலும் போக்குவரத்து நிலைமை சீர்திருத்தப்பட்டது. இன்று சென்னையின் முக்கிய வீதிகளில் கீழே தூர்ந்துபோய், துருப்பிடித்துக் கிடக்கும் இருப்புப் பாதைகளும், மேலே தொங்கி ஊசலாடிக்கொண்டிருக்கும் டிராம்வே மின்சாரக் கம்பிகள் தவிர, மற்ற விதத்தில் டிராம்களின் கவனம் மறக்கப்பட்டது என்றே கூறலாம்.

டிராம்வேகம்பெனியை மூடியதால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட சங்கடத்தை நீக்க—போக்குவரத்து முட்டுப்பாட்டைத் தவிர்க்க சென்னை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்தது. அது பாராட்டத்தற்குரியதேயாகும். ஆனால் அதேபொழுது, நாம் மற்றொரு விஷயத்தையும் மறந்துவிடக் கூடாது. டிராம்வே கம்பெனி தனது தொழிலை நிறுத்தியதால் சங்கடத்திற்குள்ளாக்கப்பட்டவர்கள், அதனை உபயோகித்துவந்த பொதுமக்கள் மட்டுமல்ல, அந்தக் கம்பெனியில் வேலை பார்த்துவந்த தொழிலாளர்களுமாவார்கள் கம்பெனி மூடப்பட்டதால் 1,200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையினின்று திடீரென்று தள்ளப்பட்டு, நிராதரவாக விடப்பட்டனர். அவர்களில் பெரும்பாலோர் இன்றும், வேறு வேலை எதுவும் கிடைக்காத நிலையில், வேதனை மிகுந்த வாழ்வில் உழல்கின்றனர். அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க, குறைகளைத் தீர்க்க சென்னை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எதும் எடுக்கவில்லை. டிராம் வண்டிகள் மீண்டும் ஓடவேண்டுமா, வேண்டாமா; இப்பொழுது அரசாங்கம் செய்துள்ள போக்குவரத்து ஏற்பாடுகள் போதுமா, போதாதா என்பதல்ல, இப்பொழுதுள்ள விவாதம்; வேலையின்மையால் தாக்கப்பட்டு, வேதனையிலுழலும் தொழிலாளர்களுக்கு, மீண்டும் வேலை தர, வாழ்வு தர அரசாங்கம் செய்தது என்ன என்ற கேள்விதான் பிறக்கிறது.

கம்பெனி மூடப்பட்டதற்கு அதன் நிர்வாகத்தினர், கம்பெனியினால் ஏராளமாக நஷ்டம் வருவதாக கணக்குக் காட்டுகின்றனர். தனிப்பட்ட முதலாளிகளாலும், அதிலும் பிற நாட்டு முதலாளிகளாலும் நடத்தப்படும் தொழில்களில் லாப நோக்குதான் முதலிடம் பெறுகிறதேயன்றி, பொது நலன் பற்றிய கவனமும், அக்கரையும் இடம் பெறுவதில்லை தொழில் வகைகளும், பொருளாதாரப் பிடிகளும், வேற்று நாட்டாரிடம் சிக்கியிருந்தால்—அது வெள்ளைக்காரனிடமிருந்தாலும், வடநாட்டு சேட் டால்மியா, பிர்லா, டாட்டாக்களிடம் இருந்தாலும், இந்த நாட்டில் இயங்கும் தொழில்களின் ஆதிக்கப்பீடம் லண்டனிலிருந்தாலும், டில்லியிலிருந்தாலும்,- அந்தத் தொழில்களில் லாபம் கோடிக்கணக்கில் குவிகிற பொழுது; அவை மூட்டை மூட்டையாகச் சுரண்டுகிறவர்களுக்கு—சுரண்டுகிற நாட்டுக்குப் போய்ச் சேரும். சிறிது நஷ்டம் என்று தோன்றினால், உடனே தொழிலை மூடிவிட்டுப் போய்விடத்தான் தோன்றும். அவ்வாறு திடீரென்று மூடிவிடுவதால் பொதுமக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் தரப்படுகிற தொல்லைகளையும், துன்பங்களையும் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. பிற நாட்டாரால், இந்த நாட்டில் நடத்தப்படுகிற தொழில் முறைகள் ஒவ்வொன்றும். கடைசியில் ஒரு சமயம் சீரழிக்கப்பட்ட நிலையில்தான் செல்லப்படும் அந்தத் தனிப்பட்ட முதலாளிகள் அரசாங்கத்துக்கோ, பொதுமக்களுக்கோ, தொழிலாளர்களுக்கோ, எத்தகைய பதிலும் சொல்ல வேண்டாத நிலையிலிருக்கின்றனர். சுரண்டப்படுகிற ஒவ்வொரு நாட்டிலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் பிற நாட்டுக்கு அடிமைப்பட்டுகிடக்கும் எந்தப் பகுதியும், வளமை பறிக்கப்பட்டு வறுமை மிஞ்சிய நிலையில் சீரழிய வேண்டிய நிலைதான் ஏற்படும். ஒரு நாடு, தனது வளமையைக் காப்பாற்ற வேண்டுமானால், லாப நோக்குடன் உள் நுழைந்த முதலாளிகளை, பொருளாதார, அரசியல் ஏகாதிபத்தியங்களை எதிர்த்துத் தடுக்க வேண்டும். பொருளாதாரத்திலும், அரசியலிலும் முழு உரிமை பெற்ற நாடே, தனது செல்வத்தைப் பாதுகாப்பதுடன், செலவத்தைத் திரட்டித் தரும் நாட்டின் செல்வங்களாக விளங்கிடும் பாட்டாளி மக்களையும் பாதுகாக்க வியலும்.

திராவிடத்தின் பொருளாதாரமும், அரசியலும் பிற நாட்டாருக்கு அடிமைப்பட்டிருந்த நிலையில் தோன்றிய தொழில் துறைகளில் ஒன்றான டிராம்வே கம்பெனி, இன்று தொழிலை நிறுத்திக்கொண்டுள்ளது. அதன் விளைவாக நமது தொழிலாளர் பலர் கடுமையாக வாட்டப்படுகின்றனர். அவர்களைப் பற்றிய அக்கரை, வெள்ளை முதலாளிகளுக்கு இல்லாது போனதில் ஆச்சரியமில்லை! நமது மாநிலத்தை ஆளுகின்ற நமது ஆளவந்தாருக்கும் போதிய ஆர்வமில்லாததுதான் வருந்தத்தக்கது. டிராம்வே கம்பெனி வேலை நிறுத்தப்பட்டதும், அதனைக் கண்டிக்கும் முகத்தான் சென்னைக் கடற்கரையில் கூட்டப்பட்ட கூட்டத்தில் தி மு. கழகப் பொதுச் செயலாளர் பேசும்பொழுது, "நிறுத்தப்பட்ட டிராம்வே கம்பெனியை தொழிலாளர்களே கூட்டுமுறையாக நடத்தலாமென்றும், அதற்கு ஆதரவாகச் சென்னைக் கார்ப்பொரேஷனும், சென்னை அரசாங்கமும் உதவி புரிய வேண்டும" என்றும் குறிப்பிட்டார். இன்று சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புப்படி டிராம்வே கம்பெனி தனது தொழிலை கடைசியாக நிறுத்திவிடுமென்று நிச்சயமாகத் தெரிவதால், தொழிலாளர்களுக்கு ஆதரவளித்து, அவர்களது குறைகளைத் தீர்க்கச் சென்னைக் கார்ப்பொரேஷனும், சென்னை மாநில அரசாங்கமும் முனைய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அணையப்போகும் அரிக்கன் விளக்கு இன்றைய ஆட்சி!

—[o]—

புனிதமான பொங்கல் நாளில் அது பற்றிய பேச்சு ஏன்?

கடலூர் திராவிடர் திருநாளில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை

கடலூர், ஜன. 22—

"பொங்கல் விழா ஒன்றுதான் இந்த லோகத்திலும், இந்த நாட்டிலும் வாழ்வதைப் பற்றி இருக்கிறது. ஏகாதசி போன்ற விழாக்கள் அந்த (மோட்ச) லோகத்தைப் பற்றிய கதைகளாக இருப்பதால், அதைவிட, மற்ற எல்லாவற்றையும்விட, பொங்கல் தனிச்சிறப்பு வாய்ந்தது.'

"திராவிடர்களாகிய நாம் திராவிடர் என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுகிறோம்; ஆனால், ஆரியர்கள், தங்களை ஆரியர்கள் என்று கூறிக்கொள்ள வெட்கப்படுகிறார்கள்; ஆரியர்களை, ஆரியத்தை நாங்கள் கண்டிக்கும்பொழுது, திராவிடர் என்று கூறிக்கொள்ளும் ஆரியர்கள் ஏன் ஆத்திரப்படவேண்டும்? திராவிடர் என்று கூறிக்கொள்வதில் மட்டும் பயனில்லை; இதுபோன்ற மேடைகளில் நம்முடன் ஆராவமுத அய்யங்கார் கலந்து கொள்ளுகிறார்—பேசுகிறார் என்ற நிலைமை வரவேண்டும்."

"அடுத்தாண்டு பொங்கலில் திராவிடர் திருநாள் கொண்டாடும்பொழுது நல்ல உழவர்களுக்கும், நல்ல உணவு உற்பத்தி செய்தவருக்கும், நல்ல காளை - பசு வளர்ப்பவர்களுக்கும், நல்ல குழந்தைகளை வளர்ப்பவர்களுக்கும் இது போன்ற பரிசுகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

"இந்தப் புனிதமான பொங்கல் திருநாளில், நான் அரசியல் பற்றி அதிகமாய் பேச விரும்பவில்லை; முழு நிலவாகிய பொங்கல் திருநாளில், அணையப்போகும் அரிக்கன் விளக்காகிய இன்றைய ஆட்சியைப் பற்றி பேச விரும்பவில்லை; தூத்துக்குடித் தோழர்களின் துயர் துடைக்க ஆவன செய்வீர்கள் என்று நம்புகிறேன்."

—இவ்வாறு, கடலூர் மஞ்சககர் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை பேசுகையில் குறிப்பிட்டார்.

13—1—54 காலை 10 மணிக்கு நியூ சினிமாவில் தோழியர் சாந்தகுமாரி குழுவினரின் இன்னிசையுடன் தோழர் ஆர் பாலகுருசாமி தலைமையில் விழா ஆரம்பமாயிற்று. தோழர்கள் இரெ. இளம்வழுதி பி ஏ., பி எல், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ ஆகியோர் பேசிய பின், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:—

"பொங்கல் விழா என்பது, தீபாவளி. மற்றும் பல விழாக்களைப் போன்று தமிழர் – திராவிடர் கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும் மாறுபட்டதல்ல; திராவிடர் திருநாள் கொண்டாடுவதன் மூலம், உழைப்பாளர்களுக்கும், குறிப்பாக உழவர்களுக்கும், பொதுவாக நம் நாட்டிற்கும் மதிப்பளித்தவர்களாகிறோம்."

அடுத்து தோழர் க. அன்பழகன், எம். ஏ., பேசியதாவது:—

"சங்கராந்தி பண்டிகையை பொங்கல் விழாவாக மாற்றி தமிழர் திருநாளாக ஆக்கி, இன்று திராவிடர் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது; இந்தப் பெருமை திராவிடர் இயக்கத்தைச் சேர்ந்ததேயாகும்."

மாலை நிகழ்ச்சி

கடலூர் (என் டி) மஞ்சைநகர் கேப்பிடர் ரோட்டு தொடக்கத்திலிருந்து பல வீதிகளில், தோழர்கள் எம. ஜி. இராமச்சந்திரன், இரெ. இளம்வழுதி எம்.ஏ., பி எல், சித்தார்த்தன், பி ஏ., மற்றும் இயக்கத் தோழர்களுடன் கைத்தறி துணிகள் விற்றனர்.

கடலூர் (ஓ டி.) முக்கிய வீதிகளில், தோழர்கள் க. அன்பழகன், ஏ. கோவிந்தசாமி, மற்றும் இயக்க தோழர்களால் கைத்தறி துணி மொத்தத்திலு 800 அளவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

தி. மு. கழகத் திறப்பு விழா

மாலை 6-30 மணிக்கு கடலூர் (ஓ. டி) செல்வம் திடலில், தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ, தலைமையில் தி. மு கழகத் திறப்பு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். ஜி இராமச்சந்திரன், க. அன்பழகன், இரெ. இளம்வழுதி ஆகியோர் பேசினர் பல இடங்களில், தோழர் க, அன்பழகன், ஏ. கோவிந்தசாமி ஆகியோர் கொடியேற்றி வைத்தனர்.

☆

14—1—54 காலை 7 மணிக்கு ஓப். எம். சி. ஏ. மைதானத்தில் பூப்பந்தாட்டம், கால்பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாயிற்று. பல குழுக்களும் கலந்து கொண்டன.

காலை 10 மணிக்குக் கட்டுரைப் போட்டி, நீதிபதிகள் இரா இளம்வழுதி, வாணிதாசன், புதுமைச்சித்தன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. "திராவிட நாட்டுப் பிரிவினை; பெண்கள் முன்னேற்றம்; கவிதையின் மறுமலர்ச்சி" என்ற தலைப்புகள் போட்டிக்கென கொடுக்கப்பட்டது

அன்று மாலை 6 மணிக்கு "புதிய கல்வித் திட்டம்; திராவிடர் திருநாள்; மதம் அவசியமா?" என்ற தலைப்புக்களில் பேச்சுப் போட்டி நடைபெற்றது.

☆

15—1—54 காலை 7 மணிக்கு தொடர்ந்து கால் பந்தாட்டம், பூப்பந்தாட்டமும். 10 மணிக்கு சடுகுடு விளையாட்டும் நடைபெற்றது. மாலையில், கால் பந்தாட்ட முடிவும், கருக்குமாப் போட்டியும், வேகமாக நடந்தல் ஓட்டுதலும், ஒரு மைல் ஓட்டமும், 220 கெஜ ஓட்டமும், நீள தாண்டுதலும், மாறுவேடமும் நடைபெற்றது

☆

16—1—54 காலை 7-30 மணிக்குப் பூப்பந்தாட்டம் இறுதிப் போட்டி நடைபெற்றது இதில் திராவிட ஐவர்கள் வெற்றி பெற்றனர்.

காலை 9-30 மணிக்கு, நியூ சினிமாவில் தோழர் சென்னை சண்முகம், தோழியர் ஜி சாந்தகுமாரி ஆகியோரின் இன்னிசையுடன் துவங்கியது. தோழர் தில்லை வில்லாளன் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் வாணிதாசன், மு. கருணாநிதி ஆகியோர் பேசினர்.

தோழர் கருணாநிதி பேசுகையில், ஆரிய-திராவிடர் வேற்றுமைக்கு இலக்கிய சான்றுடன் ஆதிபபாக சில பதிகாரத்தைக் காட்டியும், 'கல்கி' ஆசிரியர் ஆரியர் — திராவிடர் என்பது அறிவீனம் என்று எழுதியிருப்பதைத் தக்க சான்றுடன் மறுத்துக் கூறியும், இன்று நமது வீட்டில் பொங்கல் பொங்கும் பொழுது தூத்துக்குடி, கல்லக்குடி தோழர்களின் வீட்டில் துயரம் பொங்குவதையும் குறிப்பிட்டார்.

மாலை 3-30 மணிக்கு, தோழர்கள் அண்ணாதுரை, கே. எ. மதியழகன், சி. வி ராஜகோபால் ஆகியோர் வந்து சேர்ந்தனர்

மாலை 5 மணிக்கு தோழர் கருணாநிதி லக்ஷ்மியர் பாளையத்திலும், வண்ணாரப் பாளையத்திலும், அழகிரி நாடக மன்றத்திலும் கொடியேற்றி வைத்தார்.

திருப்பாபுலியூரில் பல இடங்களில் தோழர்கள் எ கோவிந்தசாமி, ஆர். பாலகுருசாமி ஆகியோர் கழகக் கொடிகளை ஏற்றி வைத்தார்கள்.

மாலை 5-30 மணிக்கு திருப்பாபுலியூர் தி மு. கழகத்திலிருந்து தோழர் கருணாநிதி தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு மஞ்சை

(3-ம் பக்கம் பார்க்க)

"'திராவிடர் திருநாள்' — மனிதனை மனிதனாக மதிக்கும் மகத்தான விழா"

"மற்ற பண்டிகைகளைப்போல் பொங்கல் தெரிய காலண்டரைப் புரட்ட வேண்டாம்"

திருச்சி திராவிடர் திருநாள் விழாவில் கருணாநிதி, கண்ணதாசன் சொற்பொழிவு

திருச்சி, ஜன. 22—

"பல வைதிக மூடப்பழக்க வழக்கத்துடன் இணைந்து, மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையைப் போட்டு, ஓரினம் மட்டும் தன்னை உயர்ந்தோனாக்கி, மற்ற மக்களை அடிமைப் படுகுழியில் தள்ளி, வாழ வழிவகுத்துக் கொண்டது, வஞ்சக எண்ணங்கள் நமது திருநாட்களில் கிடையாது. மனிதனை மனிதனாகவும், உழைப்புக்கு மதிப்பு அளித்து சமத்துவ நீதியுடன் வாழும் நிலையை அடிப்படையாகவும் கொண்டதுதான் திராவிடர் திருநாளான பொங்கல் விழா; நமது இனத்தாருக்கு அமைந்த உயர்ந்த பண்பாக கொண்ட விழா,"

—என்று, திருச்சி தேவா மன்றத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில், தோழர் மு. கருணாநிதி குறிப்பிட்டார்.

★

"தை மாதம் முதல் நாள் பொங்கல் என்பதும், அது தமிழர் விழாவென்பதும் காலண்டரைப் பார்க்காமலே அறியலாம். ஆனால், தீபாவளி முதலிய பண்டிகைகளை காலண்டரைப் பார்த்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். பொங்கல் விழா ஏர் பின்னால் போக வேண்டிய விழா, பசுவைப் போற்றும் பண்பான விழா. பொங்கல் செய்து உண்பதால் தமிழனின் பண்டைய நாகரீகத்தின் உணவு அருந்தும் உன்னத முறை வெளியாகிறது. வடிக்காமல் பொங்கலாக அருந்துவது சத்துள்ள உணவு உண்பதற்குச் சமமானது."

—என்று, தோழர் கண்ணதாசன் அவர்கள் அதே கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

17—1—54-ல், பெரியகடை வீதி தி. மு. கழக ஆதரவில், திருச்சி தேவர் மன்றத்தில் காலை 9 மணியளவில் நடைபெற்றது. தோழர் மதிவாணன் தலைமை வகித்தார். கழகத் தோழர்கள் இயக்கப் பண் பாடினர். தோழர்கள் மு. கருணாநிதி, கண்ணதாசன், அம்பில தர்மலிங்கம், எம். எஸ். மணி, எஸ். நெடுமாறன் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர். தோழர் கருணாநிதி 'திருநாள்' என்பது பற்றிப் பேசினார்.

வண்ணை—சென்னை

வண்ணையம்பதி (தியாகராய கல்லூரி சமீபம்) தி. மு. கழக அனுதாபிகளால் பணம் திரட்டி அதன் மூலம் 300 சிறுவர்களுக்கு மேல் இனிப்புப் பண்டம் பொங்கலன்று காலை 7 மணிக்கு வழங்கப்பட்டது. 131 என். இல்லக் கொடி மரத்தில் தி. மு. கழகக் கொடி, தோழர் பலராமன் அவர்களால் ஏற்றுவிக்கப்பட்டது.

ஆலடிக்குமுளை

தி. மு. கழக சார்பில், தோழர் சிவலிங்கம் தலைமையில், தி. மு. கழகத் தலைவர்களின் படங்கள், வாத்திய இசையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

கோவை

லாலி ரோடு சிந்தனைப் படிப்பகத்தின் சார்பில், 17-1-54ல், சொற்பொழிவுப் போட்டி, விளையாட்டுப் போட்டி, சைக்கிள் போட்டி, இசைப் போட்டி, மாறுவேடப் போட்டிகள் நடைபெற்றன. மந்திரம் தந்திரம் என்ன என்பதுபற்றி புரபசர் சி. பி. கிருஷ்ணராவ் விளக்கிக் காட்டினார். தோழர் தமிழ்மணி வரவேற்புரைக்குப் பின் தோழர் மா. பிச்சக்கண்ணு தலைமையில், சிந்தனை நாடகக் குழுவினரால் இரவு 8 மணிக்கு 'உழவன் வீட்டிலே' என்ற நாடகம் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தலைவர் பரிசுகள் வழங்கினார். பலர் சொற்பொழிவாற்றினர்.

குமாரம்

சௌந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பகத்தின் சார்பில், காலை 9 மணியளவில் தோழர் ச. செபண்டியன் தலைமையில் தோழர் சி. கோவிந்தராசன் கொடியேற்றினார். தோழர்கள் எஸ். பி. ரத்னம், கே. வி. கருப்பையா, எம். பாண்டித்துரை ஆகியோர் பேசினர். 12 மணி முதல் மாலை 5 மணி வரை 600 பேருக்குக் கஞ்சி வார்க்கப்பட்டது.

ராப்ராய்—நீலகிரி

ராப்ராய் தி. மு. கழக சார்பில், 200 சிறுவர்களுக்கும், 15 ஏழைகளுக்கும் எஸ்டேட் டீ பாக்டரி முன் சர்க்கரைப் பொங்கலும், சாதமும், பாயசமும் வழங்கப்பட்டது. தோழர் ஆர். தங்கவேல் அவர்களால் கழகத்திற்கு ஒரு மேஜை விரிப்பு அன்பளிக்கப்பட்டது.

வேந்தன்பட்டி

பாரதி இளைஞர் கழக சார்பில் புலவர் பெரி. சிவனடியான் தலைமையில், தோழர்கள் சோம இராமலிங்கம், அக குமரப்பன், அ பழனியப்பன், இராம. லெ இராமநாதன், கா. அண்ணாமலை, கா சிங்காரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அலசந்தாபுரம்

17—1—54 மாலை 6 மணிக்கு கிராம முன்னேற்றக் கழக சார்பில் தோழர் அரு. முனிரத்தினம் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் எ. கே. அனுமந்தராய கவுண்டர், எம். எல். ஏ., கு. மு. அண்ணல்தங்கோ, அ கு அனுமந்தராயன், எ. டி. நெடுமாறன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கோல்டுங்கரி - பம்பாய்

அக்தேரி கோல்டுங்கரி தி. மு. கழகச் சார்பில், மாலை 5-மணிக்கு கழகப் பணிமனைமுன் தோழர் எஸ். துரைராஜ் தலைமையில் விழா நடைபெற்றது. கழகச் செயலாளர் கூட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசினார். தோழர் ராஜு திராவிடப் பண் பாடினார். தோழர்கள் ஏ. சுந்தரேசன், திருஞானம், பி. செண்பகப்பாண்டியன், எஸ். எம். பாண்டியன் ஆகியோர் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின், தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. இரவு 8 மணிக்கு தோழர் ஐயப்பன் குழுவினரால் இன்னிசை நடைபெற்றது.

கீழக்கரை

மதி வளர்ச்சி மன்ற சார்பில், தோழர் வி. நடராசன் தலைமையில் தோழர்கள் க. ஆறுமுகம், எம். என். தேவன், எம். சுல்தான், கு. செயராமன், க சண்முகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். குழந்தைகட்கு இனிப்பு வழங்கப்பட்டது.

வழுதியூர்

மாலை 4 மணிக்கு தி. மு. கழகக் கொடிகளுடன் ஏராளமான தோழர்களுடன் ஊர்வலம்வந்து முன்னணித் திடலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். இறுதியில், எல்லோருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

வாகனேரி— கல்பாளையம்

27-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், காலை 10 மணிக்கு, கழகக் கட்டிடத்தில், தோழர் எம். எஸ். மைக்கில் கொடியேற்றி வைத்தார். மற்றும், தோழர்களில் பலர் இல்லங்களிலும் கொடியேற்றி வைக்கப்பட்டு, குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

புளியகுளம்

15—1—54ல், தி. மு. கழகச் சார்பில், தோழர் ம. கிருஷ்ணன் தலைமையில், பாரதி கலா மன்றத்தாரால் இன்னிசை வழங்கப்பட்டது. தோழர்கள் அ. பழனிசாமி, ர. ம. சம்பத், சி. ரத்தினசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். வீடுதோறும் பொங்கல் வழங்கப்பட்டது.

பாண்டுப்—பம்பாய்

தி. மு. கழகச் சார்பில், மாலை 5 மணிக்கு தோழர் எம். ஆர். கொம்பையா தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் டி. என். நாராயணன் வரவேற்புரை ஆற்றினார். தோழர் டி. ஏகாம்பரம் கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசினார். தோழர்கள் சண்முகராசனும், என். எம். ராஜவேலனும் திராவிடப் பண் பாடினர். தலைமையுரைக்குப் பின் தோழர்கள் என். கோவிந்தசாமி, எம். என். தாமஸ், வி. தேவதாசன், க. தங்கவேலர், டி. எஸ். நாராயணன், சு. வன்னியசிங்கம், கே. என். அப்பா ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், தேநீர் வழங்கப்பட்டது.

தாராவி—பம்பாய்

சௌந்திர பாண்டியனார் பகுத்தறிவு மன்ற சார்பில் மாலை 5-மணிக்கு, தாராவி சந்திர காந்தி வாடியில், தோழர் சா. தர்மராசன் தலைமையில், தோழர்கள் பன்னீர்பா, வடவைக் குயில், குமரதாசன் ஆகியோர் விழா பற்றி சொற்பொழிவாற்றினர்.

தாப்பு—வேணுபூண்டி

இவ்வூரில், தோழர் இராசகோபால் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் இரா. கலியமூர்த்தி, ஜி. கே. மூர்த்தி, எம். இரத்தினம், ஆகியோரால் இசையும், வாழ்த்துரையும் நடைபெற்றது. பொது மக்களுக்கு சர்க்கரை பொங்கல், கரும்பு, பழம் வழங்கப்பட்டன.

சிலைம்பட்டி

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பெரியகுளம் பகுதியிலுள்ள சிலைம்பட்டியில் தி. மு. கழக சார்பில், விழா கொண்டாடப்பட்டது. பொது மக்கள் புடைசூழ காளை மாடுகள் வரிசை வரிசையாகச் செல்ல குதிரைமீது கழகக் கொடியைத் தாங்கி வண்ணம் விருதை தோழர் க. இராமசாமி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். திரு.வி.க. திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் இ. செட்டியன் இன்னிசை விருந்தளித்தார். தோழர் க. இராமசாமி பேசுகையில், இயற்கையோடு இயைந்த ஒரே விழா பொங்கல் நாளே என்று குறிப்பிட்டார். தோழர் சாமுவேல் நன்றி கூறினார்.

திண்டுக்கல்

தி. மு. கழக சார்பில், மாலை 6-30 மணிக்கு சோலை ஹால் திடலில் விழா ஆரம்பமாயிற்று. தோழர்கள் பி. சமதர்மம், ஏ. சுப்பையா ஆகியோர் பேசினர். மதுரை தோழியர் இலட்சுமியின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. இறுதியில் முத்தமிழ் மன்றத்தாரால் "வழக்கு வாபஸ்" நாடகம் நடைபெற்றது.

* * *

விழாவை முன்னிட்டு வெளிப்பட்டணம் (முகவை டவுன்) தி. மு. கழகக் கட்டிடம் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டது. அன்று மாலை 200 ஏழைச் சிறுவர்களுக்குப் பாயசம் வழங்கப்பட்டது.

மதுரையில் திராவிடர் திருநாள்

பொங்கல் புதுநாளன்று, எங்கும் தி. மு. கழகத் தோரணங்கள் கட்டி, கொடிகள் ஏற்றி வைத்து ஒலிபெருக்கி முதலியன வைத்து விழா கொண்டாடப்பட்டது. 10—1—54 முதல் 13—1—54 வரை நகர்க் கழக அலுவலகத்தில் கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டன. நான்கு தினங்களும் விற்பனையான கைத்தறித் துணிகள் ரூ 1683—3—6 ஆகும்.

கொடியேற்று விழா

15—1—54ம் தேதி மாலை 4 மணிக்கு, மதுரை ஆரப்பாளையம் திடலில், புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் தி. மு. கழகக் கொடியை ஏற்றிவைத்து பொங்கல் விழாவும், தி. மு. கழகமும் என்பது பற்றி சொற்பொழிவாற்றினார். தோழர் எஸ். முத்து அவர்களும் பேசினார். அதன்பின் ஆரப்பாளையம் குறுக்குச் சாலையிலும் தி. மு. கழகக் கொடியைத் தோழர் எம். ஜி ராமச்சந்திரன் ஏற்றிவைத்தார்.

பின்னர், 'இன்பக் கனவு' நாடகத்திற்காகச் சின்னமனூர் செல்லும் வழியில் உசிலம்பட்டியில் பெருவாரியான மக்கள் தோழர் ராமச்சந்திரனை வரவேற்றார்கள். முத்துத்தேவன்பட்டியில், அவர் தி. மு. கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

பொதுக்கூட்டம்

17—1—54ந் தேதி மாலை 6-30 மணிக்கு மதுரை நகர் தி. மு. கழக ஆதரவில் தெமார்க்கட் அண்ணா திடலில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். முத்து அவர்கள் தலைமை வகித்தார். செந்தமிழ்-சுப்பிரமணியம் பேசியபின், தோழர் கண்ணதாசன் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கி இரண்டு மணி நேரம் சொற்பொழிவாற்றினார். தலைவர் முடிவுரைக்குப்பின் 10-45 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

அவனையப்போகும் அரிக்கன்............

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நகர் மைதானம் வந்தடைந்தது.

மஞ்சை நகர் மறுமலர்ச்சி மன்றத் திறப்பு விழா தோழர் சித்தார்த்தன் தலைமையில், தோழர் இளவழகன் கொடியேற்றி வைக்க, தோழர் கருணாநிதி மன்றத்தைத் திறந்து வைத்தார். தோழர் மதிவாணன் தோழர் அண்ணாதுரை படத்தைத் திறந்து வைத்தார். தோழர் வாணிதாசன் சொற்பொழிவாற்றினார்.

பொதுக்கூட்டம்

மஞ்சை நகர் மைதானத்தில் அழகிரி நாடகக் குழுவினரால் அமைக்கப்பட்டிருந்த மேடையில் கூட்டம் ஆரம்பமாயிற்று. சென்னை தோழர் சண்முகம் இசைவிருந்து அளித்தார். தோழர் இரா. இளம்வழுதி அவர்கள் தலைவர்களை வரவேற்றும், விழாவிற்குப் பலவகையிலும் உதவி செய்து, தொண்டாற்றியவர்களைப் பாராட்டியும், தோழர் எ. கோவிந்தசாமி அவர்களைத் தலைமை தாங்கும்படி முன்மொழிந்தும் சொற்பொழிவாற்றினார். சொற்பொழிவு, கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் புத்தகங்களும், விளையாட்டுப் பந்தயங்களில் வெற்றி பெற்றவர்களுக்கு வெள்ளிக் கோப்பைகளும், பதக்கங்களும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களால் அளிக்கப்பட்டது.

பின்னர் தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ., தலைமை வகித்துப் பேசினார். சி. வி. ராஜகோபால் தோழர் கோவிந்தசாமி அவர்கள், சட்ட சபையிலும், வெளியிலும் மக்களுக்காகப் போராடுவதை விளக்கிக் கூறினார்.

அடுத்து தோழர் மதியழகன், ஆச்சாரியார் கல்கி மலரில் எழுதிய "வண்ணாச் சின்னான்" கதையைக் குறிப்பிட்டு, ஆரிய—திராவிட பண்பாட்டை விளக்கி பேசினார்.

பின்னர், தோழர் கருணாநிதி தி. மு. கழகத்தின் மும்முனைப் போராட்டங்கள் பற்றி விளக்கிப் பேசினார்.

அடுத்து, பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களுக்கு பொங்கல் விழாக் குழு சார்பிலும், பல கழகங்கள், தொழிற் சங்கங்கள், மன்றங்கள், நாடகக் குழுக்கள், நகர மக்கள்முன்னணி ஆகியவற்றின் சார்பிலும், கைத்தறி ஆடைகள், மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

இறுதியாக தூத்துக்குடி நிதிக்காக கடலூர் நகர தி. மு. கழகங்களின் சார்பில் ரூ. 350 கொண்ட பண முடிப்பை விழாக் குழுத் தலைவர் இரா. இளம்வழுதி அவர்களால் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களிடம் அளிக்கப்பட்டது.

கடலூர் ஓ டி. உண்டியல் வசூல் 9—8—3, கருணாநிதி கையொப்பம் போட்டதில் ரூ 3—12—0; எம். ஜி. இராமச்சந்திரன் கையொப்பமிட்டதில் ரூ. 2—12—0; மதியழகன் கையொப்பமிட்டதில் அணா 8; மாறுவேடம் பூண்ட பார்த்தசாரதி உண்டி வசூல் ரூ 2-0-6; திருப்பாதிரிப்புலியூர் எம். ஏ. சண்முகம் ரூ 5 ஆக ரூ. 23—8—9 தொகையை பொருளாளர் எ. கோவிந்தசாமி அவர்களிடம் தூத்துக்குடி நிதிக்காக கொடுக்கப்பட்டது. தோழர் கே. ஜி. ராமநாதன் நன்றி கூறுதலுடன் விழா முடிந்தது.

16—1—54 மதியம் 2-30 மணிக்கு ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் பயங்கர ரயில் விபத்து

—(:)—

200 பேர் வெந்து மாண்டனர்; - - எண்ணற்றோர் படுகாயமுற்றனர்

கராச்சி, ஜன. 21—

கராச்சி வந்துகொண்டிருந்த பாகிஸ்தான் மெயில் இன்று காலை விபத்துக்காளானதால் சுமார் 200 பேர் தீயில் வெந்து மாண்டதாகத் தெரிகிறது.

மெயில் வண்டி இங்கிருந்து 75 மைலிலுள்ள ஜியபிக் என்ற இடத்தருகே பெட்ரோல் டாங்கி வாகன் ஒன்றுடன் மோதிக் கொண்டதால் விபத்து ஏற்பட்டது. வண்டி மோதியவுடன் பெட்ரோல் டாங்கி வெடித்து தீப்பற்றிக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது. இந்தச் சமயத்தில் காற்று வீசியதால் தீ பரவி வண்டி முழுதும் பரவியது.

இதுபோன்ற ரயில் விபத்து இந்தியா—பாக். வரலாற்றிலேயே நடந்ததில்லையெனக் கூறப்படுகிறது. மாண்டவர்கள் நீங்கலாக, காயமடைந்தோர் சோத்ரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

விபத்துக்குள்ளான மெயில் வண்டியில் 'பாக். வெளிநாட்டிலாகா அமைச்சர் ஜாருல்லா காணும் இருந்தார்; ஆனால், அவர் எந்தவித பேராபத்துமின்றித் தப்பித்துவிட்டார்.

ரயில் மோதுண்ட இடம் பாலைவனமாதலால் விபத்துக்குள்ளானவர்கள் குடி தண்ணீர்கூட கிடைக்காது கஷ்டப்பட்டனர்.

திருச்சி 20-வது வட்ட தி. மு. க. தோழர்களுக்கு

24—1—54 ஞாயிறு காலை 10 மணியளவில் கழக கட்டிடத்தில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அது சமயம் 10-1-54ல் நடந்த ஆண்டு விழா வரவு செலவு கணக்கும் தோழர் எம். என். மணி அவர்கள் தலைமையில் 1954க்கு உண்டான செயற்குழு தேர்தல்கள் நடைபெறும். தோழர்கள் இதனையே அழைப்பாகக் கருதி வர வேண்டுகிறேன். என செயலாளர் வி. குப்புசாமி அறிவிக்கிறார்.

பொதுச் செயலாளர்

அண்ணாதுரை

மாயவரம் வருகை

★

நடராசன் நினைவு வாசகசாலையின் முதலாவது ஆண்டு விழாவை முன்னிட்டு, 31—1—54 ஞாயிறு மாலை நகரப் பூங்காவில், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., தலைமையில், தோழர்கள் அண்ணாதுரை, கே. ஆர். சம்பந்தம், பி. ஏ., எம். எல். ஏ., ஆர். பாலகுருசாமி ஆகியோர் பேசுவர். அவ்வமயம் நடராசன் நினைவு வாசகசாலை சார்பில் வசூலித்து தூத்துக்குடி நிதிக்கு ரூ. 501 கொடுக்கப்படும்.

கழகக் கூட்டம்

★

மதுரை

24—1—54 மாலை 6 மணிக்கு

இடம்: தல்லாகுளம் பெருமாள் கோவில் திடல்

பேசுவோர்:

எஸ். நெடுமாறன்

எட்டயபுரம் லிங்கன்

போர்ச்சுகலில் போர்ச் சாயல்

தயாராயிருக்கும்படி துருப்புகளுக்கு எச்சரிக்கை!

பம்பாய், ஜன. 21—

போர்ச்சுகல் நாட்டிற்கும், கோவாவிற்கும் இடையே செல்லும் பிரயாணிகள் கப்பல் யாவும் சிப்பாய்களையும், யுத்தத் தளவாடங்களையும், இந்தியாவிலுள்ள போர்ச்சுகல் திட்டில், போர் ஆயுதங்களுக்காகக் கொண்டு வந்து சேர்க்கின்றன என்று கோவா தேசிய காங்கிரஸ் அறிவிக்கின்றது.

கோவா காங்கிரஸ் ஒரு அறிக்கையில் கூறுவதாவது:-

கோவா சர்க்காரின் சமீபகால நடைமுறை, அது அண்மையில், வெளியிலிருந்துவரும் சூழ்நிலைக்குத் தயாராயிருக்கும்படி போர்ப் படையினருக்கு விடுத்த அறிக்கையைப் பின்பற்றி வருவதாகவும், இந்த யுத்தகாலம் போன்ற ஆயத்தங்கள் சில மாதங்களாகவே நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கிறது.

மேலும், அவ்வறிக்கையில் கூறுவதாவது:—

போர்ச்சுகீசின் வாணிபக் கப்பல் கம்பெனியைச் சேர்ந்த 'என். எஸ். இந்தியா' என்ற கப்பல் மூலமாக போர்ச்சுகீஸ் உயர்தர இராணுவ அதிகாரிகளும், சிப்பாய்களும் இங்கு வந்து சேர்ந்துள்ளனர். மேலும், போர்ச்சுகல் இந்தியாவிலுள்ள இராணுவத்தினருக்கு அலவன்சுகள் அதிகரித்துள்ளதாக சென்றவாரம் வெளியான ஓர் சர்க்கார் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தஞ்சை அரிசி சென்னைக்கு வரத் தடை விதித்ததின் பலன்

சென்னையில் அரிசி விலை உயருகிறது!

சென்னை, ஜன. 22—

சென்னை நகரில் சென்ற சில நாட்களாகத் திடீரென்று அரிசித் தட்டு ஏற்பட்டுள்ளது. முக்கியமாக பச்சரிசி விலை அதிகரித்துக் கொண்டே போகிறது.

படி ரூ. 1—1—6 வரையில் விற்றிருந்த நெல்லூர் பச்சரிசி படி விலை ரூ 1—4—0க்கு உயர்ந்துள்ளது. இதன் காரணமாக சுற்றுப் புறங்களில் கிடைக்கும் பச்சரிசி விலையும் 14 அணாவிலிருந்து ரூ. 1—2—0க்கு உயர்ந்துவிட்டது.

ஆந்திராவிலிருந்து அரிசி வருவது தடைபட்டிருப்பதாலேயே இந்த விலையேற்றத்துக்குக் காரணமென்று தெரிகிறது.

ஆந்திராவிலிருந்து அரிசி வருவது தடைப்பட்டிருக்கும் அதே நேரத்தில், பிராந்திய முறை ரத்து செய்யப்பட்டும், தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து சென்னைக்கு அரிசி கொண்டு வருவது அனுமதிக்கப்படவில்லை. ரயில்வேக்கள் அரிசி வாகன்களை ஏற்றுக் கொள்ளாததோடு, லாரிகள் மூலம் கொண்டு வருவதையும் ஜில்லா அதிகாரிகள் அனுமதிக்கவில்லை.

இதுபற்றி, சென்னை நிதி மந்திரி சி. சுப்பிரமணியத்தை கேட்டதற்கு, சர்க்கார் உணவு அதிகாரிகளுடன் இது பற்றிக் கலந்தாலோசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார். ஆந்திராவிலிருந்து அரிசி வருவது விரைவில் மீண்டும் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் சொன்னார்.

பிராந்திய முறை ரத்தான உத்திரவு, அதிகாரிகளுக்கு உத்தியோகப் பூர்வமாக கிடைக்காததால்தான் இடைஞ்சல்கள் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

சென்னையில் துணி விலை கூடுதலாகும்!

சென்னை, ஜன. 22—

இந்த மாநிலத்தின் வசிக்காத வியாபாரிகளிடமிருந்து, இங்குள்ள வியாபாரிகள் செய்த வியாபாரத்திற்காக 1953 ஏப்ரல் 1ந் தேதி முதற்கொண்டே விற்பனை வரி வசூலிக்க சர்க்கார் செய்த முடிவின் காரணமாக, சென்னையில் துணிமணிகள் விலை ஏறலாம் எனத் தெரிகிறது.

"புரட்சி செய்து புது ஆட்சியை நிறுவுவதே பொதுவுடைமையர் திட்டம்"

மதுரை மாநாட்டு சான்றுகளைப் படம் பிடிக்கிறார் புருஷோத்தமதாஸ் திரிகம்தாஸ்

பம்பாய் ஜன. 22—

நாட்டில் ஆயுதம் தாங்கிய கலகத்தை நடத்த தங்களைத் தயார் செய்து வருகிற ஏற்பாடுகளை எல்லாம் மறைக்கவே, சட்டமுறையில் ஜனநாயக நடவடிக்கைகளை மேற்கொள்வதே இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, தனது கொள்கையென்று அறிவிக்கிறதென்று எடுத்துக் காட்ட எழுத்துச் சான்றுகளுடன் (தஸ்தாவேஜுகள்) சாட்சியங்களிருப்பதாக ஜனநாயக ஆராய்ச்சி சர்வீஸ் ஆலோசனைக் குழு உறுப்பினரும்; மக்கள் சோஷலிஸ்ட் கட்சித் தலைவருமான புருசோத்தம்தாஸ் திரிகம்தாஸ் பத்திரிகையாளர் கூட்டத்தில் கூறியுள்ளார்.

அண்மையில், மதுரையில் நடந்த பொதுவுடைமை மூன்றுவது காங்கிரசின் கூட்டத்தில் பிரதிநிதிகள் இன்றி, மத்தியக் குழு உறுப்பினர்களுக்கு மட்டும் வினியோகிக்கப்பட்ட இரகசியமான எழுத்துச் சான்றுகள் கிடைத்திருப்பதாகவும், மாநாடு இரகசியமாக நடத்தும் கூட்டங்களில் நிறைவேறிய தீர்மானங்களில் முக்கியமான சில இன்னும் வெளியிடப்படவில்லையென்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

தமக்கு எங்கிருந்து இரகசிய எழுத்துச் சான்றுகள் கிடைத்ததென்பதை வெளியிட இவர் மறுத்துவிட்டார்.

தமக்குக் கிடைத்துள்ள இரகசிய எழுத்துச் சான்று ஒன்றை அவர் வாசித்துக் காட்டினார். அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

பொதுவுடைமைக் கட்சியின் நகல் திட்டத்தின் முக்கியமான குறிக்கோள் நிலப்பிரபுத்துவ முறையை நீக்கி, அவர்களிடமிருந்து நிலங்களை எடுத்து விவசாயிகளுக்கும், விவசாயத்தொழிலாளருக்கு மிடையே வினியோகம் செய்வது, அதோடு முற்றிலும் தேசிய விடுதலை அடைவதாகும்.

இக் குறிக்கோள்களை சாதாரண பாராளுமன்ற முறைகளில் அடைந்துவிட முடியாது. பெரிய புரட்சி நடத்தி தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்த்து, மக்கள் ஜனநாயக அரசை ஏற்படுத்துவதன் மூலமே இது சாத்தியமாகும்.

நகரிலுள்ள தொழிலாளர்களையும், விவசாயிகளையும் திரட்டி, ஓர் பெரிய போராட்டத்தை நடத்தி ஆகவேண்டுமென்று மற்றொரு எழுத்துச் சான்று கூறுகிறதென்று அவர் தெரிவித்தார்.

பாப்பநாய்க்கன் பாளையம் தி. மு. கழகம்

கோவை, ஜன. 20—

16—1—54ல், தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், முத்தமிழ் இளைஞர் மன்றக் கட்டிடத்தில் தோழர் வை. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றபோது, புதிய உறுப்பினர்களாகத் தோழர்கள் இரா. வேணுகோபால் செயலாளராகவும், வை. சுப்பிரமணியம் துணைச் செயலாளராகவும், பொ. துரை பொருளாளராகவும், மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'டி. எஸ். பி.' நாடகம்

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டையூரில் விருதை தோழர் பி. இராமசாமி தலைமையின் கீழ் "டி. எஸ். பி." நாடகம் நடைபெற்றது. பல ஊரார்களின் தி. மு. கழகக் கிளைகளின் சார்பில் தோழர் இராமசாமிக்கு வரவேற்புகள் வழங்கப்பட்டன. கழகக் கொடியை ஏற்றிவைத்து 'தி. மு. கழகத்தின் இலட்சியம்' என்பது பற்றி விரிவுரையாற்றினார். தோழர் கிருட்டிணன் இயக்கப் பண் பாடினார்.

"பத்திரிகைகளுக்கு உள்ளது போன்ற சுதந்திரம் சினிமாப் படங்களுக்கும் இருக்கவேண்டும்; படம் துன்மார்க்கத்தைப் போதிக்கிறதென்றோ, குற்றம் செய்யத் தூண்டுகிறதென்றோ கருதி தடை விதிப்பது கூடாது" என்று அமெரிக்க சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கூறியுள்ளது.

இந்தியாவின் வர்த்தகம்

6 மாதங்களில் ஏற்பட்ட நஷ்டம்

கல்கத்தா, ஜன. 22—

இந்தியாவின் அயல் நாட்டு வர்த்தகம் 1953 ஏப்ரல் முதல் அக்டோபர் வரையுள்ள காலத்தில் மிகவும் குறைந்துள்ளது. மொத்த வர்த்தகம் ரூ 788·26 கோடியிலிருந்து ரூ. 663·73 கோடிக்குக் குறைந்துவிட்டது. ஏற்றுமதியை விட இறக்குமதிகளில் அதிக குறைவு காணப்பட்டது. இந்த 6 மாதங்களில் இந்தியாவுக்கு ரூ. 14.45 கோடி நஷ்டமேற்பட்டுள்ளது.

தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் தோழர் சம்பத்

14—1—54 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு கரூர் அமராவதி ஆற்றங்கரைக்கருகில் உள்ள இடத்தில், திராவிடர் திருநாள் பொதுக்கூட்டம் தோழர் கே. எ. முருகேசனார் தலைமையில் நடைபெற்றது. ஈரோடு தோழர் எஸ். அப்பாவு திராவிடர் திருநாள் குறித்தும், நாட்டு விடுதலை குறித்தும் பேசினார். தோழர் ஈ. வெ. கி. சம்பத் பொங்கல் விழாவின் அவசியம் குறித்தும், நாட்டின் நிலை குறித்தும், புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தின் கேடுகள் குறித்தும் பேசினார். தோழர் கரிகாலன் நன்றி கூறினார்.

*   *   *

14—1—54 வியாழக் கிழமை இரவு 10 மணிக்கு திருச்சி பீமநகர் தி. மு. கழகத் தோழர்களால் நடத்தப்பட்ட "பரப்பிரம்மம்" நாடகம் தேவர் ஹாலில் நடைபெற்றது. தோழர் சம்பத் தலைமை வகித்தார். தூத்துக்குடி நிதிக்கு ரூ 101 தோழர் சம்பத் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

★

16—1—54 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு மாயவரம் பூங்கா மைதானத்தில் ஆசிரியர் வேலாயுதம் மன்றம் மூன்றுவது ஆண்டு விழா தோழர் வி. சங்கையன் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஆர். பழனிச்சாமி கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினார். தோழர் இளங்கோ ஆண்டு அறிக்கை வாசித்தார். மாயவரம் தோழர் கே. ஆர். சம்பந்தம் எம். எல். ஏ., சட்டசபை நடவடிக்கை குறித்தும், தி. மு. கழகக் கொள்கைகள் குறித்தும் பேசினார். தோழர் என். அப்பாவு மறைந்த தோழர் வேலாயுதம் அவர்கள் சேவை குறித்தும், நாட்டு விடுதலை குறித்தும் பேசினார்.

பின்னர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் ஆசிரியர் வேலாயுதம் அவர்களின் சேவை குறித்தும், திராவிடர் திருநாளின் அவசியம் பற்றியும், நாட்டின் தற்கால நிலை பற்றியும், ஆரம்பக் கல்வித் திட்டத்தின் கேடுகள் குறித்தும், நாட்டு விடுதலை அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

கூட்டத்தில் தோழர் சம்பத் அவர்களுக்கு வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டு, மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டது. தூத்துக்குடி வழக்கு நிதிக்கு உண்டியல் மூலம் வசூலான ரூ 20—1—6-ம், தோழர்கள் பி. சோமசுந்தரம், ஆர். பழனிச்சாமி, கணேசன் இவர்கள் மூலம் ரூ. 15—0—0-ம், ஆக மொத்தம் ரூ 136—1—6 தூத்துக்குடி வழக்கு நிதிக்கு தோழர் சம்பத்திடம் கொடுக்கப்பட்டது.

17—1—54 மாலை 5-30 மணிக்கு திருவெண்காடு தி. மு. கழக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. ஆர். சம்பந்தம் எம். எல். ஏ., தலைமை வகித்தார். தோழர்கள் எஸ். வி. லிங்கம், சம்பத் ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளைக் குறித்துப் பேசினர்.

17—1—54 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு சீர்காழி வடக்கு வீதியில், தி. மு. கழகப் பொதுக் கூட்டம் மாணவர் கழகத்தின் சார்பில் நடத்தப்பட்டது. கூட்டத்திற்கு தோழர் ராமு அவர்கள் தலைமை வகித்தார். தோழர் என். அப்பாவு கழகக் கொள்கைகள் குறித்துப் பேசினார். தோழர் எஸ். வி. லிங்கம் கழக வளர்ச்சி, வரலாறு குறித்துப் பேசினார். பின்னர் தோழர் சம்பத், தற்கால அரசியல் நிலை குறித்தும், ஜனநாயகம் மேலைநாடுகளில் அமுலாக்கப்படும் விதத்தையும், ஆச்சாரியார் கொண்டுவந்துள்ள புதிய கல்வித் திட்டத்தின் கேடுகள் குறித்தும் பேசினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.